BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

# ஒன்ட்டேரியோ அரசாங்கமானது தனது உள்ளூர் மதிப்பீட்டு மையங்களில் தொற்று சோதனைக்களுக்கான எண்ணிக்கைகளை அதிகரித்திருக்கிறதால், ப்ராம்ப்ட்டன் நகர அலுவலர்கள் அனைவரும் தங்களை கோவிட் -19 (COVID-19) தொற்றுக்காக சோதித்துக்கொள்ளும்படி நகர நிர்வாகம் கேட்டுக்கொள்கிறது

ப்ராம்ப்ட்டன், ON (மே 25, 2020) – இன்றைய தினம், ப்ராம்ப்ட்டன் நகர ஊழியர்கள் அனைவரையும் தங்கள் உள்ளூர் சுகாதார பிரிவில் கோவிட்-19 (COVID-19) தொற்றுக்காக சோதனை செய்துகொள்ளுமாறு நகர நிர்வாகம் கேட்டுக் கொள்கிறது . கோவிட்-19 (COVID-19) தொற்றுக்கு ஆட்பட்டுவிட்டதாக அல்லது தொற்று உண்டாகிவிட்டதாக நம்பும் அனைத்து ஊழியர்களும் ஒரு பரிசோதனையை செய்துகொள்ளுமாறு நகர நிர்வாகம் பரிந்துரைக்கிறது. ஒன்ட்டேரியோ அரசாங்கம் கூடுதல் சோதிக்கும் திறனைக் கொண்டிருப்பது, மற்றும், இந்தச் சோதனையை செய்துகொள்ள விரும்பும் அனைத்து தனிநபர்களும் சோதித்துக் கொள்ளலாம் என்ற முடிவின் காரணமாக, இந்த வேண்டுகோளானது விடுக்கப்படுகிறது.

உள்ளூர் மதிப்பீட்டு மையத்திற்கு வருகை தரும் எவரையும் உடனடியாக பரிசோதிக்கத் தொடங்கவேண்டும் எனவும், யாரையும் திருப்பி அனுப்பிவிடக்கூடாது எனவும் ஒன்ட்டேரியோ சுகாதாரத்துரையினரால் பீல் பப்ளிக் ஹெல்த் –க்கு ஆணையிடப்பட்டிருக்கிறது. மதிப்பீட்டு மையத்திற்கு செல்ல வேண்டும் என டெலிஹெல்த் ஒன்ட்டேரியோ, ஆரம்ப சுகாதார பராமரிப்பு அல்லது பொது சுகாதாரத் துறை ஆகிய அமைப்புகள், சோதனையை நாடி வருகின்ற குடியிருப்புவாசிகளுக்கு இனிமேற்கொண்டு பரிந்துரைக்க வேண்டியதில்லை.

நகரின் வசதியமைப்புக் கட்டிடங்கள் மற்றும் ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து ஆகியவற்றில் கூடுதல் பாதுகாப்பு நடவடிக்கைகள் மூலமாகவும் பெரிய கூட்டங்களை ஊக்குவிக்கின்ற அல்லது உடல் ரீதியான சமூக விலகலுக்கான தூரம் பேணுவதை சிரமமாக்குகின்ற சமூக நிகழ்ச்சிகள் மற்றும் சேவைகளை இல்லாமல் செய்வதன் மூலமாகவும், ப்ராம்ப்ட்டன் நகரில் கோவிட்-19 (COVID-19) தொற்று பரவுவதைத் தடுக்க, நகர நிர்வாகம் தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அமைவிடங்கள் உட்பட, மாகாணத்தின் இணையதளத்தில் உள்ள அனைத்து மதிப்பீட்டு மையங்களையும் சுகாதார அமைச்சகம் பட்டியலிடும், இதனால் பொதுமக்கள் மற்றும் அலுவலர்கள் ஆகியோர் மதிப்பீட்டு மையங்களை எளிதாகக் கண்டறிய முடியும். சோதனை செய்தல் மற்றும் நடமாடும் மதிப்பீட்டு மையங்களை அதிகரிப்பதற்கான மாகாண அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை நகர நிர்வாகம் வரவேற்கிறது, மேலும் நகரத்தின் அத்தியாவசிய மற்றும் முக்கியமான சேவைகள் தேவைப்படுகின்ற

பணியிடங்களில், நடமாடும் மதிப்பீட்டை எளிதாக்க உள்ளூர் மருத்துவமனைகளுடன் நகர நிர்வாகம் இணைந்து செயல்படும்.

ப்ராம்ப்ட்டன் வர்த்தக வாரியம் மற்றும் டவுண்டவுன் ப்ராம்ப்ட்டன் BIA மூலமாக, சமீபத்திய வாரங்களில் மீண்டும் திறக்கப்பட்ட வணிக அமைப்புக்களில் பணிபுரிகின்ற ஊழியர்களும் ஒரு சோதனையை செய்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளும்படியும் உள்ளூர் வணிக அமைப்புக்களை இந்த நகர நிர்வாகம் ஊக்குவிக்கும்.

**அறிஞர் கூற்றுக்கள்**

“நான் நேற்று பிரதமருடன் பேசியபோது, மாகாணம் முழுவதும் சோதனை செய்வதற்கான திறன் அதிகரிப்பு பற்றி உற்சாகம் கொடுக்கப்பட்டேன். அறிகுறிகள் இல்லாதவர்களும் கூட கோவிட்-19 (COVID-19) தொற்றுக்காக பரிசோதிக்கப்பட வேண்டும் என்ற அவர்களின் வேண்டுகோளின் பேரில் நாங்கள் அரசாங்கத்துடன் பேசி வருகிறோம், இதனால் கோவிட்-19 (COVID-19) தொற்று பரவுவதைத் தடுக்க நகர ஊழியர்களும் சோதித்துக் கொள்ளும்படி  வேண்டுவதன் மூலம் ஒன்ட்டேரியோ மாகாணத்தில்,  ப்ராம்ப்ட்டன் நகரம் ஒரு எடுத்துக்காட்டாக இருந்து வழிநடத்த முடியும்.”

*- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“கோவிட்-19 (COVID-19) தொற்று பரவுதலை  எதிர்த்துப் போராடுவதற்கு ப்ராம்ப்ட்டன் நகரம் நமது உள்ளூர் சுகாதார பங்காளிகள் மற்றும் நமது  தொழிலாளர் கூட்டமைப்புக்களுடன் ஒத்துழைக்கிறது, மேலும் ப்ராம்ப்ட்டன் நகரின் மக்கள் தொகையில் இந்த வைரஸ் தொற்று பரவலைத் தணிப்பதில் இப்படி அதிகரிக்கப்பட்ட சோதனைகள் - குறிப்பாக எங்கள் அத்தியாவசிய மற்றும் முக்கியமான சேவை ஊழியர்களுக்கு செய்வதானது- ஒரு முக்கிய பங்காற்றுகிறது என்பதையும் நாங்கள் அறிவோம்.  கிராஃப் வரைபடத்தில், வளைந்து உயர்ந்து வருகின்ற கோவிட் -19 தொற்றின் வளர்ச்சிக் கோட்டை மட்டுப்படுத்தி தட்டையான நேர்கோடாக ஆக்குவதற்கும் நாம் தொடர்ந்து ஒன்றிணைந்து பணியாற்றுவோமாக. ”

*- டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

“இந்த தொற்று பரவலின் போது, ப்ராம்ப்ட்டன்  நகரம் முழுவதும் ஒரு முக்கியமான சேவையை செய்ய முனைவதில், எங்கள் அலுவலர்கள் தங்கள் வேலைகளை செவ்வனே செய்கிறார்கள் மற்றும் முன்னணியில் இருந்து கடினமாக வேலை செய்கிறார்கள். எங்கள் அலுவல் உறுப்பினர்கள் முன்கூட்டியே சோதனைக்கு உட்படுத்தப்படுவதற்கு நாங்கள் ஆதரவளிக்கிறோம் மற்றும்  தொற்று பரவலைக் காட்டுகின்ற வளைந்து உயர்ந்து செல்லும் நேர்கோட்டை தட்டையானதாக மாற்றுதற்கு நாங்கள் ஒன்றிணைந்து செயல்படுகிறோம்; இதன் மூலம்   அவர்களையும் நமது பேருந்து போக்குவரத்து பயணிகளையும் பாதுகாப்பாக வைத்திருக்க முடியும். ”

*- ஃப்ரான்க் வனி, தலைவர், ஒருங்கிணைந்த பேருந்து போக்குவரத்து சங்கம், உள்ளூர் 1573*

“இந்த கோவிட் -19 (COVID-19) தொற்றுபரவலை நாங்கள் சமாளிப்பதை உறுதி செய்வதற்கு எங்களுக்கு முதலில் முன் நின்று செவிசாய்த்தவர்களே தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். மாகாண நிர்வாகத்தினால் சோதனை செய்வதற்கான அதிகரித்த திறனின் காரணமாக, நமது உறுப்பினர்களுக்கு அறிகுறிகள் இல்லாவிட்டாலுமேகூட, தொற்றுக்கான சோதனை செய்துகொள்ளுபடி நாங்கள் மேலும் ஊக்குவிக்கிறோம்; இதனால் இந்த தொற்று பரவலைக் குறைக்க முடியும்.”

*- பால் லேகோம்ப்ட்டே, தலைவர், ப்ராம்ப்ட்டன் நகர தொழில்சார் தீயணைப்பாளர்களுக்கான சங்கம், உள்ளூர் 1068*

“இந்த சவாலான நேரத்தில் நகருக்கான சேவைகளை வழங்குவதில் எங்கள் உறுப்பினர்கள் தொடர்ந்து பங்களிப்பு செய்கிறார்கள், மேலும், தீர்வுக்கான ஒரு பகுதியாக இருக்க எங்கள் உறுப்பினர்களை ஊக்குவிக்கிறோம்; இதன்மூலம் கூடியவிரைவில் வழக்கப்படியான வணிகம் செய்யும் நிலைக்கு திரும்பிச் செல்ல முடியும். அதிகரித்த சோதனை செய்தல் கிடைக்கும் பட்சத்தில், உறுப்பினர்கள் சோதிக்கப்பட வேண்டும் என்பதை நாங்கள் பரிந்துரைக்கிறோம், இதனால் கோவிட்-19 (COVID-19) தொற்று பரவலை வெல்வதற்கான எங்கள் பங்கை நாங்கள் செய்ய இயவும்.”

*- கனடா நாட்டு பொதுத்துறை உழியர்கள் சங்கம், உள்ளூர் 831*

-30-

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமூக ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca